**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 222 / 2019**

**வா.சா.1 – இந்திரா** **09.07.2025**

**குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்தின் சர்வே எண் 285/1ஏ ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 59 செண்டு ஆகும். தாவா சொத்து 59 செண்டு இன்று வரை எனக்கு பாத்தியமாக உள்ளது என்றால் சரிதான். 59 செண்டில் தெற்கு பக்கம் கிழமேல் 173 அடி தென்வடல் மேற்குபுறம் 11 கிழக்கு புறம் 5 அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 59 செண்டு சொத்து லுயிசிடம் 2005 ல் நான் கிரையம் வாங்கியுள்ளேன். லுயிஸ் தான் கிரைய பத்திரத்தில் கையொப்பம் போட்டார். மல்லிகா என்பவர் எனது உடன்பிறந்த அக்கா. அவரது கணவர் பெயர் பாண்டியன். 2005ல் நான் கிரையம் வாங்கிய போது பட்டா, பத்திரம், ரசீது அனைத்தும் கொடுத்தார்கள். 2005ல் நான் லுயிசிடம் இருந்து 6 சொத்துக்களை கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கிய பின்பு என் பெயருக்கு பட்டா மாறியது. எனது கிரைய பத்திரத்தில் 24 ஏர்ஸ் விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது எனது பட்டாவில் 23.5 ஏர்ஸ் விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சர்வே எண் 285/1ஏ 59 செண்டுக்கு மேல்புறம் தென்வடல் 40.2 மீ ஆகும். கிழக்கே எனக்கு ஞாபகம் இல்லை. வடபுறம், தென்புறம் கிழமேல் அளவு எவ்வளவு என்று ஞாபகம் இல்லை. பள்ளிக்கூட காம்பவுண்டின் தெற்கு எல்லையிலிருந்து எனது இடம் ஆரம்பமாகிறது என்றால் சரியல்ல. 59 செண்டு சொத்தின் உள்ளே நான் ஒரு ஓட்டு வீடு கட்டியுள்ளேன். 59 செண்டு சொத்தின் மேற்குபக்கம் கற்கால்கள் ஊன்றி முள்வேலி போட்டுள்ளேன். மேற்கு பக்கம் ஒரு கேட் உள்ளது. மேற்கு பக்கம் இரண்டு கேட் அமைப்பு இல்லை. பள்ளிக்கூடத்திற்கு கிழக்கே உள்ள சொத்து யாருடையது என்றால் என்னுடையது. அந்த சொத்து 59 செண்டில் கட்டுப்படாத வேறு சொத்து ஆகும். அந்த சொத்தின் சர்வே எண் 294 ஆகும், உட்பிரிவு ஞாபகம் இல்லை. சர்வே எண் 294ல் ஒரு வீடு உள்ளது அதை நான் ஆரோக்கியம் மகன் ஜெயராஜ்க்கு

கிரையம் கொடுத்துவிட்டேன். ஜெயராஜ் வீட்டிற்கு செல்வதற்கு பள்ளிக்கூட சுவருக்கு தெற்கே உள்ள பாதை வழியாக சென்று வருகிறார் என்றால் சரியல்ல எனது இடத்தின் வழியாக சென்றுவருகிறார், தற்போது சாட்சி அவருக்கு பாதைக்கு தனியாக இடம் கொடுத்துள்ளேன். எனது வீட்டிற்குவடக்கு பக்கம் ஜெயராஜ்க்கு பாதை கொடுத்துள்ளேன். எத்தனை அடி அகலத்திற்கு எவ்வளவு நீளத்திற்கு பாதை கொடுத்துள்ளேன் என்று ஞாபகம் இல்லை. நான் கொடுத்துள்ள பாதை எனது வீட்டிற்கு வடக்கேயும் பள்ளிக்கூட காம்பவுண்ட் சுவருக்கு தெற்கேயும் உள்ளது என்றால் சரிதான். பிரதான சாலையிலிருந்து மேற்படி பாதை ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு இரும்பு கேட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து இரண்டு முறை நீதிமன்ற ஆணையர் வந்து தாவா சொத்தை பார்வையிட்டார். ஆணையர் வரைபடத்தில் 59 செண்டில் மேற்கு பகுதியில் இரண்டு கேட்டுகள் அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண் அளந்த போது புலப்படத்தில் குறைபாடு உள்ளதாக சொன்னாரா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்தை நான்கு பக்கங்களிலிருந்து அளந்த போது அளவுகள் முன்னுக்கு பின் முரணாக இருந்தது என்றால் சரியல்ல. ஜெயராஜ்க்கு 59 செண்டில் தான் பாதைக்கு இடம் கொடுத்துள்ளேன். அளந்த போது பாதையின் தென்புறத்திலிருந்து எனது இடம் ஆரம்பிப்பதாக கூறினார்கள். மேற்படி பாதையையும் சேர்த்து அளந்தால் பிரதிவாதிகள் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யாதது போல் வரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் என்னால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே எண் 285/1ஏ ஆகும். வா.சா.ஆ.6 ஆவணத்தின் 285/1ஏ2 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சர்வே எண் 285/1ஏ சொத்தை அளந்தார். நீதிமன்ற ஆணையர் சர்வே எண் 285/1ஏ2 –சொத்தை அளந்ததாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரியல்ல. சர்வேஎண் 285/1ஏ1 சாலையாக உள்ளது. சாலைக்காக எவ்வளவு தொகை எனக்கு கொடுத்தார்கள் என்று

எனக்கு ஞாபகம் இல்லை, எப்போது சாலைக்காக இடம் எடுத்தாரக்ள் என்று ஞாபகம் இல்லை. சாலைக்காக 59 செண்டில் எவ்வளவு விஸ்தீரணம் எடுத்தார்கள் என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் தேதி குறிப்பிடாமல் யாரிடம் கொடுக்கப்பட்டது என்று இல்லை என்பதால் அந்த ஆவணம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.12 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 3 ஆவணங்களில் எனக்கு என்ன நோய் இருந்தது எவ்வளவு நாள் நான் சிகிச்சையில் இருந்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் நான் கூடுதலாக சொத்து வேண்டும் என்று இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் சொந்த ஊர் தோக்கனேந்தல். நான் 59 செண்டை கிரையம் வாங்கிய போதே பிரதிவாதிகள் அவர்களது இடத்தில் குடியிருந்தார்கள். நான் தான் பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்கிறேன் பிரதிவாதிகள் என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கிய போது தென்மேற்கு மூலையில் ஒரு கட்டுமானம் இருந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு கட்டுமானம் இருந்தது அந்த கட்டுமானத்துடன் எனக்குரிய 59 செண்டு முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. அந்த கட்டுமானத்தை இடித்துவிட்டு பிரதிவாதிகளின் இடத்தையும் சேர்த்து கல்ஊன்ற நானும் எனது கணவரும் முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. நான் உண்மையில்லாத விபரங்களை கூறி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரையரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது நீதிமன்ற ஆணையர் இரண்டாவது முறையாக தாவா சொத்தை

பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் ஆகும் அந்த அறிக்கை நீ,ம.சா.ஆ.3 வரைபடம் நீ.ம.சா.ஆ.4 ஆகும். மேற்படி நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4 சரியாக உள்ளது என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**